# நாட்டின் வளர்ச்சிக்கு முதலீடுகள் தேவை

இந்தியா வளர்ச்சி பெற அன்னிய முதலீட்டை அதிகரிக்க வேண்டும் என தோஹா வங்கி சிஇஓ சீதாராமன் கூறினார். திருச்சியில் நிருபர்களுக்கு அளித்த பேட்டியில் அவர் மேலும் கூறியதாவது:

மத்திய அரசின் 2015-16ம் நிதியாண்டுக்கான பட்ஜெட் நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 8முதல் 8.5சதவீதம் வளர்ச்சியை அடிப்படையாகக் கொண்டு உருவாக்கப்பட்டுள்ளது.

இந்த நிதியாண்டில் நடப்புக் கணக்குப் பற்றாக்குறை மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 1.3சதவீதமாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. இந்தியாவின் வளர்ச்சியை அதிகப்படுத்தும் வகையில் உள்கட்டமைப்புத் திட்டங்களின் முதலீடு அதிகரித்தல், வர்த்தகப் பற்றாக்குறையை கட்டுக்குள் வைத்தல், விலைவாசியை குறைத்தல் உள்ளிட்ட பல்வேறு விஷயங்களின் அடிப்படையில் பட்ஜெட் தயாரிக்கப்பட்டுள்ளது.


சீதாராமன்

இதன் தொடர்ச்சியாக, இந்தியா 7.4 சதவீதம் வளர்ச்சி பெறும் என எதிர்பார்க்கலாம். மேலும் கொள்கை ரீதியான மாற்றங்கள் கொண்டு வரப்பட்டுள்ளது. நாட்டின் வளர்ச்சிக்கும், உள்கட்டமைப்பு மேம்பாட்டிற்கும், 12வது திட்டக்கமிஷன் அறிக்கையின்படி 1டிரில்லியன் டாலருக்கு மேலான முதலீடு தேவை. சொத்து வரிக்கு முறை உள்ளிட்ட நல்ல திட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. பணவீக்கம் 5.1 சதவீதமாக குறைந்துள்ளது. இன்னும் குறைக்க வேண்டும். ரிசர்வ் வங்கி ரெப்போ ரேட்டை 0.25 சதவீதம் குறைத்திருப்பது உற்பத்தியாளர்களுக்கு உதவியாக இருக்கும்.

பணவீக்கத்தை கட்டுப்படுத்தினால், வட்டி விகிதம், கடன்தொகை குறைந்து, உலகச் சந்தையில் இந்திய பொருட்கள் நல்ல மதிப்பு பெறும். உலகநாடுகளில் அமெரிக்கா வீழ்ச்சியிலிருந்து எழுந்து வேகமாக வளர்ந்து வருகிறது. தற்போது இந்தியாவிற்கு அன்னிய நாட்டின் முதலீடுதான்.

2014ம் ஆண்டில், அதிகபட்சமாக சீனாவில் 128 பில்லியன் அன்னிய முதலீடு வந்துள்ளது. இந்தியாவில் 30 பில்லியன் அன்னிய முதலீடு வந்துள்ளது. எனவே இந்தியாவில் அந்நிய நாடுகளின் முதலீட்டை அதிகரிக்க வேண்டும். இதற்கான வழிவகைதான் இந்த பட்ஜெட் ஏற்படுத்தியுள்ளது. ஏற்றுமதியை அதிகரித்து, இறக்குமதியை குறைக்க வேண்டும். நுகர்வோர் சந்தையில் இந்திய சந்தை மிகப்பெரியது. இன்னும் பொருளாதார வளர்ச்சி தொடரும்போது, 10 ஆண்டுகளில் இந்தியா பொருளாதார வல்லரசாக மாறும். வளைகுடா நாடுகளும் இந்தியாவும் நல்ல உறவுநிலையில் உள்ளன. 130பில்லியன் வர்த்தகப் பரிமாற்றம் இருநாடுகளுக்கும் இடையே நடைபெறுகிறது.

7மில்லியன் இந்தியர்கள் வளைகுடா பகுதிகளில் வேலை செய்கின்றனர். தற்போது தோஹா வங்கி மும்பையில் தனது முதல் கிளையைத் தொடங்கியுள்ளது. அத்துடன் உலகம் முழுவதும் 15நாடுகளில் கிளைகள் உள்ளன. கத்தார் மற்றும் இந்தியா ஆகிய இருநாடுகளுக்கும் இடையேயான உறவு மேம்பாட்டிலும், வளர்ச்சியிலும் தோஹா வங்கி முக்கியப்பங்காக இருக்கும் என்றார்.